148

உ

பேராவூரணி—ஆத்தாளூர்

# ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில்

# ஸ்தல வரலாறு.



10 JUL 1958

கோவிலின் முன்தோற்றம்

★

**தேவஸ்தான வெளியீடு.**

1958.

[... பற்றது] ★ [விலை ந. பை. 0-25

Q2:38·211 PA
N58
181807

உ

பேராவூரணி—ஆத்தாளூர்

# ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில்

# ஸ்தல வரலாறு

OFFICE OF THE REGISTRAR OF ...
10 JUL 1958
MADRAS

எழுதியவர்
வரலாற்றுச் செல்வர்
புலவர் திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள்
தமிழ் ஆசிரியர், திருச்சிராப்பள்ளி
(Writer of Guide Books for Temples and
Religious Lecturer H. R: & C. E.)

★

மேற்படி தேவஸ்தானம்
திரு. C. அருணாசலத் தேவர் அவர்கள் (டிரஸ்டி)
திரு. R. பார்த்தசாரதி அவர்கள் (நிர்வாக அதிகாரி)
ஆகியோர்களால் வெளியிடப்பெற்றது.

★

தேவஸ்தான வெளியீடு.

1958.

உரிமை செய்யப்பெற்றது.] ★ [விலை ந. பை. 0-25

திரு. A. உத்தண்டராம பிள்ளை, B. A., B. L., I. A S.,
கமிஷனர், H R. & C. E., மதராஸ்.

,, A. சக்கரை சேர்வை, B. A., B. L., H. R. & C. E.,
டிப்டி கமிஷனர், தஞ்சை.

,, B. ரெங்காச்சாரியார், M. A.,
அஸிஸ்டண்ட் கமிஷனர், H. R. & C. E.,
தஞ்சை.

,, மாசிலாமணி பிள்ளை,
இன்ஸ்பெக்டர், H. R. & C. E.,
பட்டுக்கோட்டை.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
18187
சென்னை-600 008

# முன்னுரை.

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் ஊற்றிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பர் ஆன்றோர். தென்னாட்டில் காணப்படும் கண்ணைக் கவரும்படியான கோயில்களில் சக்திவழிபாட்டுக்குரிய கோயில்களும் உள்ளன. அவைகளுள் தஞ்சாவூர் ஜில்லா—பட்டுக்கோட்டை தாலுகாவில்—பேராவூரணிக்கடுத்த ஆத்தாளூரில் ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில் உள்ளது. அம்மன் பேராற்றலுடையது. ஆத்தாள் என்பது அம்மனைக்குறிக்கும். தஞ்சைத் துளசி மகாராஜாவால் மானியம் விடப்பட்டது. ஸ்ரீ குட்டியப்பரைக் காவல் தெய்வமாகக் கொண்டது பக்கத்தில் ஓர் சிவன் கோயிலும் உள்ளது.

கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா (Hindu Religious and Charitable Endowments) தஞ்சை உதவி-கமிஷனர் **திரு. B. ரங்காச்சாரியார், M. A.,** அவர்களின் அனுமதிப்படி இவ்வரலாறு சுருக்கமாய் எழுதப்பெற்றது.

பழங்காலச் சின்னங்களாகிய கோயில்களைப் பாதுகாப்பதிலும், கோயில் வரலாறுகளை வெளிவரச் செய்வதிலும், சமய உண்மைகளைப்பரப்புவதிலும் தற்போதுள்ள அறநிலையத் தலைவர் **திரு. A. உத்தண்டராம பிள்ளை, B. A., B. L.,** அவர்களும், தஞ்சை டிப்டி கமிஷனர் **திரு. A. சக்கரை சேர்வை, B. A., B. L.,** அவர்களும், மற்றையோர்களும் ஆவன செய்துவருகிறார்கள். அவர்களுக்கு நமது நன்றி. இதில் கோயில் விளக்கமும், தலப்பெருமைகளும், ஸ்ரீ வீரமாகாளியம்மன்—ஸ்ரீ குட்டியப்பர்—பெருமைகளும், துதிப்பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன.

அன்பர்கள் படித்து ஸ்ரீ வீரமாகாளியம்மனின் திருவருளைப்பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி
6—3—58

**R. பஞ்சநதம் பிள்ளை,**
தமிழ் ஆசிரியர்.

## உள்ளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கோயிலும் இருப்பிடமும் ... ... | 1 |
| 2. | கோயிலின் அமைப்பு ... ... | 5 |
| 3. | கோயிலின் படம் ... ... | 6 |
| 4 | தினப்பூஜையும் திருவிழாக்களும் ... | 7 |
| 5. | தலப்பெருமைகள் ... ... | 7 |
| 6. | திருப்பணிகள் ... ... | 9 |
| 7. | வருமானமும் சொத்துக்களும் ... ... | 10 |
| 8. | நிர்வாகம் ... ... | 10 |
| 9. | வரலாறுகள் ... ... | 10 |
| 10. | துதிப்பாடல்கள் ... ... | 13 |


## கோயில் விளக்கம்.

கோயில்—ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில்,

இடம்—ஆத்தாளூர்—பேராவூரணி.

அம்மன்—ஸ்ரீ வீரமாகாளியம்மன்.

காவல் தெய்வம்—ஸ்ரீ குட்டியப்பர்.

தீர்த்தம்—அம்மன் குளம்.

சிவன் கோயில் மூலவர்—திருக்காள நாதேஸ்வரர்.

அம்மன்—பெரியநாயகி (பிரகதாம்பாள்).

தஞ்சாவூர் ஜில்லா—பட்டுக்கோட்டை தாலுகாவில் பேராவூரணி ரயில் நிலயத்திலிருந்து வடக்கே $1\frac{1}{2}$ மைல் தூரத்தில், ஆத்தாளூரில் ஸ்ரீவீரமாகாளியம்மன் கோயில் உள்ளது. பக்கத்தில் ஸ்ரீ குட்டியப்பர் கோயிலும் உள்ளது. ரயில் மூலமாகவும், மோட்டார் வண்டி மூலமாகவும் இத்தலத்தை அடையலாம்.

உ

# ஆத்தாளூர்

# ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில்

## வரலாறு.

"மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்".

### 1. கோயிலும் இருப்பிடமும்.

ஆதியந்தங் கடந்த பரம்பொருளாகிய பராசக்தி உலகத்திலுள்ள உயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும்வண்ணம் தன்கடந்த அருவ நிலையிலிருந்து இறங்கி, இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் ஆண் பெண்ணுகப் பல வகை வடிவங்களைத் தாங்கி உருவத்திருமேனிகொண்டு எழுந்தருளி, பயபக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகிறது. அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும் பால் பரவியிருந்தபோதிலும், மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவதுபோலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தபோதிலும், பளிங்கின் மூலமே (Lens) கிரணங்கள் விரைவில் வெளிப்படுவதுபோலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்தாலும் தோண்டிய இடத்தில்தானே நீர் வெளிப்படுவதுபோலவும் பரம்பொருளின் சக்தி எங்குமே வியாபித்திருந்தபோதிலும், பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே சிற்சக்தி வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள்செய்து வருகின்றது. மேலும் மின்சார அணுக்கள் சேகரிக்கப்பட்ட தனி இடம் (Power House) போல திருவருட்சக்தி அணுக்கள் நிறைந்த இடங்களாகத் திருக்கோயில்கள் விளங்குகின்றது.

நாட்டின் நலத்துக்கும் மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப் பட்டுக் கரைகாண முடியாமல் துன்பப்படும் மக்களுக்குக் கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக ( Light House ) விளங்குகின்றன. கோயில் விளங்கக் குடி விளங்கும். 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்பவை ஆன்றோர் கூறிய அனுபவ மொழியாகும். ஆதலின் மனிதப்பிறப்பைப் பெற்றவர் அனைவரும் முன்னோர்கள் அமைத்த கோயில் களுக்குச் சென்று மூர்த்திகளை வழிபட்டு அருளைப்பெறுவது சிறந்த கடமையாகும்.

யாவற்றையுங்கடந்த பரம்பொருளின் திருவருளே சிற் சக்தியாய்—பராசக்தியாய் விளங்கி உயிர்களை நடத்துகிறது. இந்தச்சக்தியுடன் சிவமாகிய பொருள் சேராவிடில் உலகில் ஒன்றும் நடைபெறாது. இந்த இரண்டு பொருள்களையும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க இயலாது. இதனை "சிவ மெனும் பொருளும் ஆதிசக்தியோடு சேரின் எத்தொழிலும் வல்லதாம், இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதரிதென மறை இறைக்கும்" என்றும், "அருளது சத்தியாகும் அரன் தனக்கு அருளையின்றித் தெருள் சிவமில்லை, அந்தச்சிவமின்றிச் சக்தியில்லை" என்றும் ஆன்றோர் கூறிய அருள்வாக்குகளால் அறியலாம். 'இதை உணர்த்துவதற்கு கோயில்களில் மூல லிங்கத்துக்குப் பக்கத்தில் போகசக்தி அம்மனின் உருவச் சிலையை அமர்த்தியிருப்பதைக் காணலாம்.

இந்தச் சக்தி "ஒன்றாயரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுல கெங்குமாய் நின்றாள்" என்றும் முதுமொழியின்படி ஆதியில் ஒன்றாயிருந்து பின்பு பற்பல வடிவங்களைப் பெறும். இச்சக்தி போகசக்தி, யோகசக்தி, கோரசக்தி என்பனவாகப்பல உருவங் களைக்கொண்டு உயிர்களுக்கு நலஞ்செய்யும். போகசக்தி சாந்தவடிவங்கொண்டு விளங்கும். யோகசக்தி தவஞ்செய்யுங் கோலத்தில் உள்ளது. கோர சக்தி வீரவடிவத்தில் விளங்கு வது. இச்சக்திகள் பெண்ணின் உருவங்கொண்டு கடவுளர் களின் துணைவியராகக் சொல்லப்படும். பிரமன், திருமால்.

உருத்திரன் ஆகிய மூவருக்கும் முறையே கலைமகள், திருமகள் துர்க்கை ஆகியோர் துணைவியராகச் சொல்லப்பெறுவர். இவர்கள் முறையே கல்வி, செல்வம், வெற்றிக்குரிய தேவிக ளாவர். நவராத்திரி உற்சவத்தில் இம் மூன்று சக்திகளையே வழிபடுவர்.

இவர்களில் கோர சக்தியாக வீரத்துடன் விளங்கும் சக்தி துர்க்கை. காளி, மகிஷாசுரமர்த்தனி முதலிய தேவிகள் ஆவர். உலகத்தில் அவ்வப்போது தோன்றும் அசுரத்தன்மைகளையும், அசுரகுணமுடையோரையும் வீரசக்தியாகிய காளி முதலி யோர் போக்கி நலஞ்செய்கிருள். உலகை ஆளும் மன்னர்கள் போரில் வெற்றியடைய வேண்டியும், தாம் எண்ணியவற்றை நிறைவேற்ற வேண்டியும் துர்க்கைத் தேவியைப் பெரிதும் வழிபடுவார்கள். இச்சக்திகள் மேலும் பலவாகச் சொல்லப் படும். தமிழ்நாட்டில் சக்திவழிபாட்டுக்குரிய தலங்கள் பல உள்ளன. அவைகளில் ஒன்ருகப் பட்டுக்கோட்டை தாலுகா வில் **ஆத்தாளூரில் ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில்** அமைந் துள்ளது.

எப்போதும் வற்ருத நீர்ப்பெருக்கையுடைய காவிரிநதி பாயும் நாடு சோழநாடு. "சோழநாடு சோறுடைத்து" என்னும் பழமொழியைப் பெற்றது. இந்நாட்டின் பெரு மையை மகா வித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு காட்டுகிருர்.

"பூவினுள்பதுமம் போலும் புருடருள் திருமால்போலும்
காவினுள் கற்பம்போலும் கலைகளுள் ஞானம்போலும்
ஆவினுள் சுரரான்போலும் அறத்துள் இல்லறம்போலும்
நாவினுள் மெய்ந்நாப்போலும் நாட்டினுள் சோழநாடு".

மேலும் தமிழ்நாடு மிகுதியான கோயில்களைக்கொண்ட இடமாகும்- நாட்டை வளப்படுத்தும் ஆறுகளும், சோலை களும், சாலைகளும், வாவிகளும் சூழ்ந்து இயற்கைக்காட்சி களைத் தந்து இன்பம் ஊட்டுகின்றன. வானளாவிய கோபுரங் களும் விமானங்களும், காண்போருக்குத் தூரத்திலிருந்த

படியே தெய்வ உணர்ச்சியைத்தூண்டும் நிலையில் அமைந் துள்ளன. நாட்டின் பல இடங்களிலும் மூர்த்தி—தலம்—தீர்த் தங்களைக் கொண்ட சைவ—வைணவத் தலங்கள். சக்திக்குரிய கோயில்கள் பல ஆங்காங்கு மிளிர்கின்றன. இவ்வகையில் தென்னாடு தெய்வ மணங்கமழும் திருநாடாகத்திகழ்கிறது.

இத்தகைய பெருமைகளையுடைய சோழநாட்டில் தஞ்சாவூர் ஜில்லா பட்டுக்கோட்டை தாலுகாவில் மாயவரம் காரைக்குடி புகைவண்டிப் பாதையில் பேராவூரணி ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 1½ மைல் தூரத்தில் சாலைக்குக் கிழக்கில் ஒரு பர்லாங் தூரத்தில் ஆத்தாளூரில் ஸ்ரீ வீரமாகாளி யம்மன் கோயில் உள்ளது. ஆத்தாள் என்பது தேவியைக் குறிக்கும். தஞ்சை அரசர் துளசிமகா ராஜாவால் இவ்வூர் மானியமாகக் கொடுக்கப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. ஆத்தாளூரில் சுமார் 200 வீடுகள் இருக்கும். ஜனத்தொகை சுமார் 1000. கோயிலுக்கு மேற்கில் ஜில்லா போர்டாரால் புதிதாகக் கட்டப்பெற்ற உயர்நிலைப்பள்ளி உள்ளது.

**பேராவூரணி** :— ஊரணி என்பது குடிதண்ணீர்க்குளத் தைக்குறிக்கும் எப்போதும் வற்றாத நீரைக்கொண்டிருப்ப தால் இப்பெயர் ஏற்பட்டுப் பிறகு ஊருக்குப் பெயராக அமைந் திருக்கலாம். ஊரணி என்ற பெயரில் தமிழ்நாட்டில் பேரூரணி மயிலூரணி என்றும் ஊர்களும் உள்ளன. மாயவரம்-காரைக் குடி ரயில் பாதையில் பட்டுக்கோட்டைக்குத் தெற்கில் 2-வது நிலையமாகப் பேராவூரணி உள்ளது. ரயில்மார்க்கமாக 13 மைல் தூரத்திலும், மோட்டார் மார்க்கமாக 18 மைல் தூரத் திலும் உள்ளது. புதுக்கோட்டை—அறந்தாங்கி மார்க்கமாக வும் இவ்வூரை அடையலாம்.

இவ்வூரில் தபால் தந்தி நிலையம், சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் டிப்டி-தாசில்தார் ஆபீஸ், 'பஞ்சாயத் போர்டாபீஸ் போலீஸ் ஸ்டேஷன் முதலிய அலுவலகங்கள் உள்ளன. சர்க்கார் உத்தி யோகஸ்தர்கள் தங்குவதற்கு முசாபரி பங்களா (Traveller's



ஸ்ரீ வீரமாகாளியம்மன்.


Bangalow) உள்ளது. குடிதண்ணீர் வசதிக்காகக் கிணற்றில் நீர் நிரப்பப்பட்டு நீர் வழங்கப்படுகிறது. சுமார் 10 அரிசி யந்திர சாலைகள் உள்ளன. துவக்க நிலைப்பள்ளியும் உள்ளது பஞ்சாயத்து ஆட்சியில் ஊராட்சி நடைபெறுகிறது. ஜனத் தொகை சுமார் 5000. ஞாயிற்றுக்கிழமை தோறும் ஜில்லா போர்டாரால் சந்தை நடத்தப்படுகிறது, அம்மன்கோயில் ஆத்தாளூரில் உள்ளது. தேவஸ்தானத்தின் அலுவலகம் (Office) பேராவூரணியைச் சேர்ந்த நாட்டாணிக்கோட்டையில் உள்ளது.

## 2. கோயிலின் அமைப்பு.

ஆத்தாளூரில் நீர்வளம் மிகுந்த சோலைகளுக்கு நடுவில் ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. உள்ளே ஓர் பிரகாரமும். வெளியில் ஓர் பிரகாரமும் உள்ளன. கோயிலுக்கு முன்னே அம்மன் குளத்தீர்த்தமும், பக்கத்தில் இரண்டு யானைகளின் சிலைகளும் உள்ளன. தென்புறத்தில் ஸ்ரீ குட்டியப்பர் சந்நிதி உள்ளது. வேலால் புலியைக்குத்தி நிற்கும் நிலையில் ஸ்ரீ குட்டியப்பர் எழுந்தருளியுள்ளார், இவர் ஸ்ரீ வீரமாகாளியம்மனுக்குக் காவல் தெய்வமாயுள்ளார். அம்மன்கோயில் முன்வாயிலை அடுத்து மணி மண்டபமும், பலிபீடமும் உள்ளன. அம்மனுக்குப் பலிகிடையாது. கீழ் புறத்தில் துவக்கப்பள்ளியும், மடைப்பள்ளியும், உள்ளன, கோயில் திட்டத்திலிருந்து சுமார் 8 பிள்ளைகளுக்குப் பகலில் பிரசாதங்கள் கொடுக்கப்படுகின்றன. உள் மண்டபத்தை அடுத்து மூலஸ்தானத்தில் ஸ்ரீ வீரமாகாளியம்மன் எட்டுக்கைகளைக் கொண்டு ஓர் அசுரனைக்கீழே மிதிக்கும் நிலையில் வீற்றிருக்கின்றாள். உற்சவச்சிலையும் இதேமாதிரி அமைந்துள்ளது. கோயில் மதிலை அடுத்துத் தென்புறத்தில் தேவஸ்தான அறையும், சாமான் அறைகளும் உள்ளன.

அம்மன் கோயிலுக்குக் கிழக்கில் ஓர் சிவன் கோயில் உள்ளது சுவாமியின் பெயர்-திருக்காள நாதேஸ்வரர். அம்மன் பெயர்-பிரகதாம்பாள் அதாவது பெரியநாயகி என்பது. முதலில் சிவன் கோயிலுக்குப் பூஜை ஆனபிறகுதான் அம்மன் கோயிலுக்குப் பூஜை நிகழும். ஸ்ரீ குட்டியப்பருக்குத் தனியே பூஜை நடைபெறும். அம்மன் கோயிலின் சுற்றளவு கிழமேலடி 76, தென்வடலடி 62. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.

## 3. கோயிலின் படம்—ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில்




### எண்களின் விளக்கம்.

1 முன் வாயில்
2 உள் வாயில்
3 உள் மண்டபம்
4 மூலவர் அம்மன் ஸ்ரீவீரமாகாளி அம்மன்
5 பாடசாலை
6 மடைப்பள்ளி
7 மணி
8, 9 } யானைகள்
10 அம்மன் குளம்
11 ஸ்ரீகுட்டியப்பர் சந்நிதி
12 தேவஸ்தானக் கட்டிடம்
13 தேவஸ்தான அறை
14, 15 } சாமான் அறை
16 பலிபீடம்

## 4. தினப்பூஜையும் திருவிழாக்களும் :—

ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயிலிலும், சிவன் கோயிலிலும் தினந்தோறும் காலை 8½ மணிக்கும் இரவு 7½ மணிக்கும் இரண்டு காலப்பூஜைகள் குருக்களால் நடத்தப்பெற்றுவருகின்றன. முதலில் சிவன் கோயிலிலும், பிறகு அம்மன் கோயிலிலும் பூஜைகள் நடைபெறும். ஸ்ரீ குட்டியப்பருக்குத் தினம் ஒரு காலப்பூஜை தனிப்பூசாரியால் நடத்தப்படுகிறது. அம்மனுக்குப் பலிகிடையாது. பூஜை நேரங்களில் பெரிய மணி அடிக்கப்படும். அந்தந்த நேரங்களில் சென்று வழிபடுவதால் மிக்க புண்ணியம் உண்டு.

''காலைதொழ அற்றவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்—மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும்''.

(சிவதரிசன மகத்துவம்)

ஆண்டுதோறும் ஆனிமாதத்தில் 10 நாட்கள்வரையில் அம்மனுக்குத் திருவிழா நடைபெறும். அம்மன் தினந்தோறும் பலவாகனங்களில் அமர்ந்து வலம்வரும். 9-ம் நாளில் கட்டுத் தேரில் அமர்ந்து காட்சிகொடுக்கும். அன்று மது எடுப்பு வைபவம் கிராமத்தாரால் மிகசிறப்பாக நடைபெறும், 10-ம் நாளில் தீர்த்தவாரி நடைபெறும் திருவிழாக் காலங்களில் சமயச் சொற்பொழிவுகளும். இசைக் கச்சேரிகளும் நிகழும்.

பிரமாதங்களில் முக்கிய நாட்களில் அபிஷேக ஆராதனைகள் நிகழும். பிரதி வெள்ளியன்றும் விசேஷ பூஜை நடைபெறும். அதற்காக நாட்டாணிக்கோட்டை கிராமத்தில் சுக்கிரவாரக் கட்டளை நிலங்கள் இருக்கின்றன. பிரதி திங்களன்றும் விசேஷ பூஜை நடைபெறுகிறது.

## 5, தலப்பெருமைகள்.

ஸ்ரீ வீரமாகாளியம்மன்கோயில் மிகவும் பழமையான கோயில் துளசிமகாராஜாவால் மானியம் கொடுக்கப்பெற்றது. கோயிலைச் சுற்றிலும் சோலைகளும் நீரோடைகளும், குளங்களும் சூழ்ந்து எப்போதும் குளிர்ச்சிவாய்ந்துள்ளது. ஸ்ரீவீரமா

18807

காளி அம்மன் மிகவும் சக்திவாய்ந்தது. தன்னை அடுத்து வரும் பக்தர்களுக்கு அவரவர் விரும்பும் வரங்களைத்தந்தருள் கிருள். அசுரக்குணங்கள் மேலோங்கிவரும் இக்காலத்தில் அசுரக்குணங்களைப் போக்கி உயிர்களுக்கு நலஞ்செய்கிருள். தனக்குப்பக்கத்துணையாகக் ஸ்ரீ குட்டியப்பரைக் காவல் தெய்வ மாகக் கொண்டுள்ளால். தான் கோரசக்தியாயிருந்தாலும் உயிர்களுக்கு வேண்டிய கல்வி, செல்வம், வெற்றிமுதலியவை களையும் வழங்கிவருகின்ருள். உலகைச் சூழ்ந்துவரும் இருள் தொகுதி நீங்கி உயிர்கள் யாவும் நலம் பெறுதற்கு அம்மையி னுடைய திருவருள்வேண்டியிருக்கிறது. எட்டுத் திசையி லிருந்தும் வரும் அசுரர்களையும், அசுரக்குணங்களையும்போக்கி அடியார்களைக் காப்பதற்கு ஸ்ரீ வீரமாகாளியம்மன் எட்டுக்கை களில் பல ஆயுதங்களைக் கைக்கொண்டு ஓர் அசுரனை மிதிக்கும் நிலையில் எழுந்தருளியுள்ளாள். ஸ்ரீ குட்டியப்ப முனிவரும் அசுர வடிவாயுள்ள ஓர் புலியை வேலினுல் குத்தி நிற்கும் நிலையில் வீற்றிருக்கிருர். மக்களுயிர்க்குவரும் இன்னல்களைப்போக்கி நலஞ்செய்யும் நிலையில் அம்மையின் திருவுருவமும், ஸ்ரீ குட்டி யப்பரின் வடிவமும் அமைந்துள்ளன.

ஒருகாலத்தில் இப்பக்கத்தில் ஓர் புலி ஆடுமாடுகளையும், மக்களையும் கொன்று துன்புறுத்திவந்ததாகவும், ஸ்ரீ குட்டி யப்பர் என்ற கள்ளர் வேட்டையாடவந்தபோது அம்பிகையின் திருவருளால் கட்டுக்கடங்காது திரிந்த அந்தப்புலியை விரட் டிக்கொண்டுவந்து இதன் எல்லைக்குள் வந்ததும் வேலினுல் குத்திக்கொன்றதாகவும், இவ்விடத்திலேயே சமாதியிருந்து அம்மனுக்கும் மற்றையோருக்கும் துணையாயிருந்து காவல் தெய்வமாகக் காத்துவருவதாகவும் சொல்லப்படுகிறது, ஓர் புலியை வேலினுல் குத்திக்கொண்டு நிற்கும் நிலையில் ஸ்ரீ குட்டி யப்பர் காட்சி தருகிருர், இவருடைய வாரிசுதார்களால் ஆண்டுக்கொருமுறை விசேட பூஜை நடத்தப்படுகிறது. உற்சவ சமயம் அக்கினிக்கொப்பரை எடுத்து கிராமங்களுக்குச்

செல்வதுமுண்டு. ஆகவே ஒருபால் அம்மனும், மற்றொரு பக்கம் ஸ்ரீ குட்டியப்பரும் கோயில்கொண்டு அருள்வழங்கி வருகிறார்கள்.

"பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே யென்று மூவாமுகுந்தற் கிளையவளே
மாத்தவளே யுன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே"

(அபிராமிஅந்தாதி)

## 6. திருப்பணிகள்.

முன்னோர்கள் ஏற்படுத்திய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி பாதுகாத்து அவ்வப்பொழுது ஆவன செய்யவேண்டும். புதியதோர் கோயிலை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியந்தரும் என்பர். எனவே இக்கோயிலில் சில திருப்பணிகள் நடந்துவந்திருக்கின்றன. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் கோயில் நிதியிலிருந்து சுமார் ஆறாயிர ரூபாய் செலவு செய்து அம்மன்கோயில் திருப்பணிசெய்யப் பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**சிற்பங்கள் :**—ஸ்ரீ வீரமாகாளியம்மனின் மூலச்சிலை மிகவும் சிற்பம் பொருந்தியது. எட்டுக்கைகளில் பல ஆயுதங்களைக் கொண்டு, கீழே ஓர் அசுரனை மிதிக்கும் நிலையில் அமைக்கப் பட்டுள்ளது. உற்சவ அம்மன் விக்கிரகமும் இம்மாதிரியே அமைக்கப்பெற்றுள்ளது. கோயிலுக்கு வெளியே இரண்டு பெரிய யானைகளின் உருவங்கள் சுதையால் அமைக்கப்பெற் றுள்ளன. ஸ்ரீ குட்டியப்பர் சந்நிதியில் ஸ்ரீ குட்டியப்பமுனிவர் ஓர் புலியை வேலினால் குத்தி நிற்கும் நிலையில் சுதையாலும் வண்ணத்தாலும் அமைக்கப்பெற்றுள்ளது. அம்மன் குளமும் படித்துறைகளுடன் அழகாய் உள்ளது.

## 7. வருமானமும் சொத்துக்களும்.

இக்கோயிலுக்குத் தற்கால நிலையில் புதிய ஆற்றின் பாசனத்தால் சுமார் 200 ஏக்கர் நன்செய் நிலமும், 100 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. குத்தகையின் மூலம் சுமார் 1500 கலம் நெல்லும். ரொக்கமாக 2000 (இரண்டாயிரம்) ரூபாயும் வருமானம் வரும். ஆண்டுதோறும் சுமார் பன்னிரண்டாயிர ரூபாய் வருமானம் வரும்.

## 8. நிர்வாகம்.

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் தேவஸ்தானக்கமிட்டியாரின் மேற்பார்வையிலிருந்துவந்தது. பிறகு 1940-ம் ஆண்டிலிருந்து சென்னை அறநிலைய பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) நேர்நிர்வாகத்தில் இருந்துவருகிறது. அறநிலையத்தாரால் நியமிக்கப்பெற்ற நிர்வாக அதிகாரியும் (E. O.), அறங்காவலரும் (Trustee) கோயில் காரியங்களைக்கவனித்து வருகிறார்கள்.

## 9. வரலாறுகள்.

இத் தலத்தில் கோயில்கொண்ட ஸ்ரீ வீரமாகாளியம்மனின் தோற்றம் மகிஷாசுரமர்த்தனியின் கோலத்தில் அமைந்துள்ளது. இந்த அம்மனைப்பற்றிய வரலாறுகள் பழயநூல்களில் கூறப்பட்டுள்ளன. பக்கத்திலுள்ள ஸ்ரீ குட்டியப்பரைப் பற்றியும் ஓர்வரலாறு சொல்லப்படுகிறது. அவைகள் சுருக்கமாகக் கூறப்படும்.

### 1. ஸ்ரீ வீரமாகாளியம்மன் :—

உலகத்தில் ஒவ்வோர் காலத்தில் ஒவ்வோர் அசுரர் தோன்றி உயிர்களுக்குத் துன்பஞ்செய்துவந்தனர். எப்போதும் நன்மைக்கும் தீமைக்கும் போராட்டம் நடந்துவருகின்றன. இராமாயண காலத்திலும், பாரத காலத்திலும் இராவணன் முதலிய பல அசுரர்கள் தோன்றி அந்தந்தத் தேவர்களால் அழிக்கப்பட்டார்கள். சூரபத்மன் முதலிய அசுரர்களையும் முருகப்பெருமான் அழித்து ஆட்கொண்டதாக நூல்கள் கூறும்.

இவ்வாறே ஒரு காலத்தில் எருமை முகங்கொண்ட மகிஷாசுரன் என்பவன் பல வரங்களைப் பெற்று மகிஷபுரம் (மைசூர்) நகரிலிருந்துகொண்டு பல இடங்களுக்கும் சென்று நல்லோர்களைத் துன்புறுத்திவந்தான். தேவர்களும் முனிவர்களும் அவருடைய துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் பராசக்தியாகிய தேவியிடம் முறையிட்டார்கள். பரமேஸ்வரி அவர்களைக் காப்பாற்றுவதற்காகத் துர்க்கை வடிவத்தில்—மகிஷாசுரமர்த்தனி வடிவத்தில் பல கைகளில் பல ஆயுதங்களைக்கொண்டு தோன்றி எருமை முகங்கொண்ட மகிஷாசுரனை வதைத்து—மிதித்துக்கொன்றாள்.

"மட்டின் மாயை வடிவின் மலைந்தபின்
நெட்டிலைத் தலைச் சூலத்தினீக்கினள்
துட்டன் மேதியதாய்படை தொட்டனள்
வெட்டி வீழ்த்தி அடியின் மிதித்தனள்"

(அருணாசலபுராணம்)

இந்தக்கோலத்தை எல்லோருக்கும் காட்டியருளும்வகையில் நவராத்திரி முடிவுநாளில் துர்க்கை தேவி மகிஷாசுரமர்த்தனியாக, அசுரனை மிதிக்கும் கோலத்தில் ஒவ்வோர் கோயிலிலும் காட்சிதருகிறாள். கோயில் விமானச் சுவர்களில் கோஷ்டதேவியாகவும் துர்க்கை அமர்ந்துள்ளாள்.

இக்கோயிலில் மூல அம்மன்—வீரமாகாளியம்மன் எட்டுக் கைகளில் பல ஆயுதங்களைக் கைக்கொண்டு ஓர் அசுரனை மிதித்து வதைக்கும் நிலையில் எழுந்தருளியுள்ளாள் எட்டுத் திசையிலிருந்தும் வரும் அசுரர்களைப் போக்கிக் காத்தருள எட்டுக்கைகளுடன் விளங்குகிறாள் போலும். இத்தேவியார் துர்க்கை—காளி—மகிஷாசுரமர்த்தனி முதலிய பெயர்களால் போற்றப்படுவர்.

தேவியின் ஒப்பில்லாத பாதம் ஊன்றி மிதித்தபொழுது மாயைத்தன்மையுள்ள மகிடாசுரன் மறைந்தான் அத்தகைய

சிறந்த பாதங்களைத்தியானித்தால் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் நீங்கிவிடும் என்பதற்கு ஐயமில்லை.

"ஒப்பிலாப்பதம் ஊன்றி மிதித்திடில்
தப்பின்மாயை தவிர்ப்பது பாரமோ
அப்பதத்தை நினைக்கினும் ஆணவஞ்
செப்புகாமிய மாயையுந் தீர்க்குமே".

(அருணாசலபுராணம்)

## 2. ஸ்ரீ குட்டியப்பர் :—

புதுக்கோட்டை சமஸ்தானத்தை சேர்ந்த ஒரு கிராமத்தில் கள்ளர் குலத்தில் ஸ்ரீ குட்டியப்பர் என்பவர் வாழ்ந்து வந்தார். அப்போதிருந்த பாலைவனம் ஜமீன்தாருடைய ஆதரவில் ஸ்ரீ குட்டியப்பர், வேல், கம்பு துப்பாக்கி முதலிய ஆயுதங்களை வைத்துக்கொண்டு ஆங்காங்கு வேட்டைக்குச் செல்வதுவழக்கம். அக்காலத்தில் ஆத்தாளூர்ப் பக்கத்தில் ஓர் கொடுமையான புலி, ஆடுமாடுகளையும், மனிதர்களையும் துன்புறுத்திவந்தது. இதைக்கேள்வியுற்ற ஸ்ரீ குட்டியப்பர் இவ்விடத்திற்குவந்து ஸ்ரீ வீரமாகாளியாகிய ஆத்தாளின் அருள்பெற்று வேட்டையாடிப் புலியை வேலினால் குத்திக் கொன்றார். ஸ்ரீ குட்டியப்பரும் இவ்விடத்திலேயே சமாதியிருந்து அம்மனுக்கும், மற்றையோருக்கும் காவல் தெய்வமாயிருந்து காத்துவருவதாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீ குட்டியப்பருடைய சந்நிதி தனியே உள்ளது. ஓர் புலியைக் கோலினால் குத்திக்கொண்டு நிற்கும் நிலையில் ஸ்ரீ குட்டியப்பர் காட்சி தருகிறார். முற்காலத்தில் மக்கள், அரியசெயல்களைச் செய்த மதுரைவீரன் முதலியவர்களைத் தெய்வ நிலையில் வைத்து வழிபட்டு வந்திருக்கிறார்கள். இவ்வகையில் ஸ்ரீ குட்டியப்பரும் தெய்வமாகப் போற்றப்பட்டுவருகிறார். இவருடைய பங்காளிகளால் ஆண்டுக்கொருமுறை பெரும் பூஜை நடத்தப்படுகிறது. தினமும் ஒரு காலப்பூஜை தனிப்பூசாரியால் நடைபெற்றுவருகிறது.

வருங்காலத்தில் உயிர்களுக்குண்டாகும் அசுரபயங்களைப் போக்கி காவல்கொண்டு நிற்கும் நிலையில்ஸ்ரீவீரமாகாளியம்மன்



ஸ்ரீ குட்டியப்பர்.

தோற்றமும், ஸ்ரீ குட்டியப்பரின் கோலமும் அமைந்துள்ளன. இவ்விருவர்களின் அருள்துணை கொண்டு வாழ்க்கையில் நேரும் துன்பங்களைப் போக்கி நலம் பெறுவார்களாக.

## 10. துதிப்பாடல்கள். தேவியார்.

1. அமல பஞ்சகிருத்தியங் கண்டத்து மதற்காதார
மாகினளை
விமலருளத் தகலாளை யெனையோர் பொருளாயாண்ட
விஞ்ஞையாளை
நிமல ஆத்தாளூரில் அமர்வீர மாகாளி அம்மையை
யொரு நிமலைதன்னை
முமல விருட் கிரவியையென் கண்மணியைப் பணிந்
திடுவர் மூன்றுபோதும்.

(பத்திரிகை)

2. சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரை எல்லாம்
வந்துஅரி சிந்துர வண்ணத்தினுள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

3. நன்றே வருகினும் தீதேவிளைகினும் நான்அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம்எனக்குள்ளவெல்லாம்
அன்றே உளதென்றளித்து விட்டேன் அழியாதகுணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்றகோமளமே.

4. தனம்தரும், கல்வி தரும், ஒரு நாளும் தளர்வு அறியா
மனம்தரும் தெய்வ வடிவம் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே-

(அபிராமி அந்தாதி)

5. தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும்சொற்சுவை
[தோய்நின்று
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூர்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந்
[நாவில்
காக்கும் கருணைக்கடலே சகலகலா வல்லியே.

(சகலகலாவல்லி மாலை)

6. செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந்து ஒளிரும்
எழில்மேனித் திருவே வேலை
அங்கணுலகு இருள் துறக்கும் அலர்கதிராய்
வெண்மதியாய் அமரர்க்கு ஊட்டும்
பொங்கழலாய் உலகு அளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானில் பொருப்பில் மண்ணில்
எங்குளைநீ அவனன்றோ மல்லல் வளம்
சிறந்தோங்கி இருப்ப தம்மா.

(இலக்குமி துதி)

7. பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
காரணி மனு தீத நாயகி குணு தீத
நாதாந்த சத்தி என்றுன்
நாமமே உச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையும் கன்னியென மறை பேசும்
ஆனந்த ரூப மயிலே
வாரணியும் இரு கொங்கை மாதர் மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே
வரை ராசனுக்கிரு கண்மணியாய் உதித்தமலை
வளர்காதலிப்பெண் உமையே.

(தாயுமானவர் பாடல்)

8. "உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
பலநல் லனநீ படைத்தருள் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
பயிர்கள் பயன்தரப் பரிந்தருள் போற்றி
செல்வம் கல்விச் சிறப்பருள் போற்றி
போற்றிஉன் பொன்னடிப் போது போற்றி".

(உமையம்மை வழிபாடு)

9. செறிதரும் உயிர்தோறும் திகழ்ந்து மன்னிய
மருவறும் அரனிடம் மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம்.

(கந்தபுராணம்)

10. எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்

(பாரதியார்)

**ஸ்ரீ குட்டியப்பர்.**

11. கொடும்புலி தன்னைக் குத்திநின்றருளும்
குட்டியப்பரின் குரைகழற் போற்றுவாம்

(ஆசிரியர்)

**விநாயகர்.**

12. விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் [தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

(இரட்டைமணிமாலை)

**முருகப்பெருமான்.**

13. மூவிருமுகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி
ஏவரும்துதிக்க நின்றஈராறு தோள்போற்றி காஞ்சி
மாவடிவைகும் செவ்வேல் மலரடிபோற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல்போற்றி

(கந்தபுராணம்)

## சிவபெருமான்.

14. ஆலமுண்டவனே போற்றி ஆதரித்தருள்வாய் போற்றி
பாலலோசனே போற்றி பகவதிப்பரனே போற்றி
கோலவெண் விடையா போற்றிகோதறு குணனே
போற்றி
காலன்றன் காலாபோற்றி கானமர் கழலாய் போற்றி

(திருஎறும்மியூர்ப்புராணம்)

## தெக்ஷிணமூர்த்தி—தென்முகக்கடவுள்.

15. மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியின் கதுவநல்கிய
செம்மலே அலதுளம் சிந்தியாதரோ

(திருவானைக்காபுராணம்)

## சண்டேசுரர்.

16. மெய்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவின லெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கடியேன்

(சுந்தரர்)

## நால்வர்.

17. பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன்
கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத்தாள் போற்றி

## கோளறுபதிகம்—(நவக்கிரகங்கள்)

18. வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கைமுடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

### வாழ்த்து.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

(திருஞானசம்பந்தர்)

ஸ்ரீ வீரமாகாளியம்மன் மலரடி போற்றி.

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
18807
600 008

வெற்றிவேல் பிரஸ், தெற்கலங்கம், தஞ்சாவூர்.